©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 50] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 21, 2016
மார்கழி 6, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண் 173, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I 2)த் துறை, 26 ஆகஸ்ட் 2016.]*

தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 4 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், 1994 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தில் கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன திட்டத்தில், 17–A பகுதியில், (2) மற்றும் (3) துணைப்பகுதிகள் விட்டுவிடப்படும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை*

*[அரசாணை (நிலை) எண் 177, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (G2)த் துறை, 31 ஆகஸ்ட் 2016.]*

தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடுச்சட்டம் 36/1972) 22 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தொழிலாளர் நலன்–வேலை வாய்ப்புத் துறையில் 23–3–2005 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II. பிரிவு–2 இல் 131 முதல் 183 ஆம் வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா/189/2005 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை அதன் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் வகையைப் பொறுத்த மட்டில், மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக ஆய்வாளராக இதனால் நியமிப்பதுடன், இதன் (4) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் அவர்கள் பணியாற்ற வேண்டிய உள்ளூர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளையும் இதனால் வரையறுக்கிறார்.

**விவர அட்டவணை**

| வ.எண் (1) | நபர்கள் (2) | நிறுவனங்களின் வகை (3) | உள்ளூர் எல்லைகள் (4) |
|---|---|---|---|
| 1. | தொழிலாளர் நல துணை ஆணையாளர்–I, சென்னை | தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் (ii), (iv), (v) ஆகிய துணைப் பகுதியின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்கள். | 1965ஆம் ஆண்டு ஊதியக் கொடைசட்டத்தின் (மத்திய சட்டம் 21/1965) 27 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அதிகார வரம்புப் பகுதிகள் |
| 2. | தொழிலாளர் நல துணை ஆணையாளர்–II, சென்னை | | |
| 3. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், வேலூர். | | |
| 4. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், திருச்சிராப்பள்ளி | | |
| 5. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், மதுரை. | | |
| 6. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், கோயம்முத்தூர். | | |
| 7. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், சேலம். | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ் நாடுச் சட்டம் 36/1972) 2ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் (ii), (iv), (v) ஆகிய துணைப் பகுதியின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்கள். | |
| 8. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், திருநெல்வேலி. | | |
| 9. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், திண்டுகல். | | |
| 10. | தொழிலாளர் நல துணை ஆணையாளர், குன்னூர். | | |
| 11. | தொழிலாளர் நல உதவிஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம்–I, சென்னை. | | |
| 12. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம்–II, சென்னை. | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ் நாடுச் சட்டம் 36/1972) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் (ii), (iv), (v) ஆகிய துணைப் பகுதியின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்கள். | 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1947) 4 ஆம் பிரிவின் கீழ், அவர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகள். |
| 13. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், வேலூர். | | |
| 14. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி. | | |
| 15. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், மதுரை. | | |
| 16. | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், கோயம்முத்தூர். | | |

| *வ.எண்* *(1)* | *நபர்கள்* *(2)* | *நிறுவனங்களின் வகை* *(3)* | *உள்ளூர் எல்லைகள்* *(4)* |
|---|---|---|---|
| **17.** | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், சேலம். | | |
| **18.** | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், திருநெல்வேலி. | | |
| **19.** | தொழிலாளர் நல உதவி ஆணையாளர், தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகம், திண்டுகல். | | |
| **20.** | மலைத்தோட்டங்கள் ஆய்வாளர். | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் (iii), துணைப்பகுதியில் விளக்கிய வாறான மலைத்தோட்டங்கள் | 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின் (மத்திய சட்டம் 69/1951)கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் அதிகார வரம்புப்பகுதிகள். |
| **21.** | மலைத்தோட்டங்கள் ஆய்வாளர் (பெண்), திருநெல்வேலி. | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 36/1972) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் (ii), (iv), (v) ஆகிய துணைப் பகுதியில் விளக்கப்பட்ட வாறான நிறுவனங்கள். | திருநெல்வேலி தூத்துகுடி, கன்னியாகுமாரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் |
| **22.** | மலைத்தோட்டங்கள் ஆய்வாளர் (பெண்), கோயம்முத்தூர். | | கோயம்முத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| **23.** | மலைத்தோட்டங்கள் ஆய்வாளர் (பெண்), சென்னை. | | சென்னை, வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| **24.** | தொழிலாளர் நல துணை ஆய்வாளர். | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ் நாடுச் சட்டம் 36/1972) 2ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் (ii), (iv), (v) ஆகிய உட்பகுதியின் கீழ் விளக்கப்பட்ட வாறான நிறுவனங்கள். | 2009 ஆம் ஆண்டு சட்டப்படியான எடை அளவைகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/2010) கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் அதிகார வரம்பு பகுதிகள். |
| **25.** | தொழிலாளர் நல உதவி ஆய்வாளர். | தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 36/1972) 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (d) பகுதியின் (iv), (v), (vi) ஆகிய துணைப் பகுதிகளின் கீழ் விளக்கப்பட்டுள்ள வாறான நிறுவனங்கள். | |
| **26.** | தமிழ்நாட்டிலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களின் வளர்ச்சி ஆணையாளர்கள்/வளர்ச்சி இணை ஆணையாளர்கள். | சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | சம்பந்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள். |

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை*

*[அரசாணை (2டி) எண் 38, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 5 அக்டோபர் 2016.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனையை கருதிப் பார்த்த பின்னர், கீழே விவர அட்டவணையின் (2) ஆம் நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் மருந்து தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாக இதனால் நிர்ணயிக்கிறார்.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**மருந்து தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

**வகை – 1 (நிருவாக பணியாளர்கள்)**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம் அ*<br>*ரூ. காசு* | *மண்டலம் ஆ*<br>*ரூ. காசு* | *மண்டலம் இ*<br>*ரூ. காசு* |
| **நிலை – 1** | | | | |
| 1. | பொது மேலாளர் | 14,700.00 | 14,320.00 | 14,100.00 |
| 2. | தலைமை மருந்தாளுநர் | | | |
| 3. | தலைமை மருத்துவ அலுவலர்/மருத்துவ கண்காணிப்பாளர் | | | |
| 4. | ஏனையோர். | | | |
| **நிலை – 2** | | | | |
| 1. | மேலாளர்/நிருவாக அலுவலர் | 12,300.00 | 12,180.00 | 12,120.00 |
| 2. | முதுநிலை பொறியாளர் | | | |
| 3. | முதுநிலை மருந்தாளுநர் | | | |
| 4. | முதுநிலை மருத்துவ அலுவலர் | | | |
| 5. | ஏனையோர் | | | |
| **நிலை – 3** | | | | |
| 1. | உதவி மேலாளர்/உதவி நிருவாக அலுவலர் | 10,975.00 | 10,625.00 | 10,375.00 |
| 2. | தலைமை பகுப்பாய்நர் | | | |
| 3. | மருத்துவ அலுவலர் | | | |
| 4. | ஏனையோர் | | | |

**வகை – II (தொழில்நுட்பம்)**

| *தொடர் எண்* | *பணியாளர் வகை* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம் அ*<br>*ரூ. காசு* | *மண்டலம் ஆ*<br>*ரூ. காசு* | *மண்டலம் இ*<br>*ரூ. காசு* |
| **நிலை – 1** | | | | |
| 1. | இளநிலை பொறியாளர் | 9,580.00 | 9,360.00 | 9,100.00 |
| 2. | முதலாள் / கண்காணிப்பாளர் | | | |
| 3. | முதுநிலை பகுப்பாய்நர் | | | |
| 4. | கொள்முதல், விற்பனை மேலாளர் / ஏனையோர் | | | |

| தொடர் எண் (1) | பணியாளர் வகை (2) | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (3) | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் அ ரூ. காசு | மண்டலம் ஆ ரூ. காசு | மண்டலம் இ ரூ. காசு |
| **நிலை – 2** | | | | |
| 1. | மருந்தாளுநர் / வேதியியலர் | 9,200.00 | 9,020.00 | 8,860.00 |
| 2. | பகுப்பாய்நர் | | | |
| 3. | முதுநிலை இயக்குபவர் | | | |
| 4. | ஏனையோர் | | | |
| **நிலை – 3** | | | | |
| 1. | உதவி மருந்தாளுநர் | 8,840.00 | 8,680.00 | 8,510.00 |
| 2. | முதுநிலை வடிகட்டுபவர் | | | |
| 3. | இயக்குபவர் | | | |
| 4. | ஏனையோர் | | | |
| **நிலை – 4** | | | | |
| 1. | வடிகட்டுபவர் | 8,420.00 | 8,260.00 | 8,130.00 |
| 2. | ஆய்வக உதவியாளர் | | | |
| 3. | மின்கம்மியர் / குழாய்க் கம்மியர் | | | |
| 4. | ஏனையோர் | | | |

**வகை – III (தொழில்நுட்பம் சாராதது)**

| தொடர் எண் (1) | பணியாளர் வகை (2) | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (3) | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் அ ரூ. காசு | மண்டலம் ஆ ரூ. காசு | மண்டலம் இ ரூ. காசு |
| **நிலை – 1** | | | | |
| 1. | கணக்கு மேலாளர் | 9,580.00 | 9,360.00 | 9,100.00 |
| 2. | ஏனையோர் | | | |
| **நிலை – 2** | | | | |
| 1. | கண்காணிப்பாளர் / தலைமை எழுத்தர் | 9,220.00 | 9,020.00 | 8,860.00 |
| 2. | மேற்பார்வையாளர் | | | |
| 3. | உதவி கணக்கு மேலாளர் | | | |
| 4. | ஏனையோர் | | | |
| **நிலை – 3** | | | | |
| 1. | முதுநிலை சுருக்கெழுத்து தட்டச்சர் | 8,840.00 | 8,680.00 | 8,510.00 |
| 2. | உதவி / முதுநிலை எழுத்தர் | | | |
| 3. | முதுநிலை கணக்காளர் | | | |
| 4. | ஏனையோர் | | | |
| **நிலை – 4** | | | | |
| 1. | பயிற்சி பெற்ற பணியாளர் | 8,420.00 | 8,260.00 | 8,130.00 |
| 2. | சிப்பமாக்குபவர் | | | |
| 3. | கொதிகலன் முதலாள் | | | |
| 4. | முதுநிலை எந்திரகம்மியர் வடிகட்டுபவர் | | | |
| 5. | கனரக வாகன ஓட்டுநர் | | | |

**வகை – III (தொழில்நுட்பம் சாராதது)**

| தொடர் எண் (1) | பணியாளர் வகை (2) | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு) (3) | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் அ ரூ. காசு | மண்டலம் ஆ ரூ. காசு | மண்டலம் இ ரூ. காசு |
| **நிலை – 4** | | | | |
| 6. | இளநிலை சுருக்கெழுத்து தட்டச்சர் | | | |
| 7. | இளநிலை உதவியாளர் / எழுத்தர் / காசாளர் / கணினி இயக்குபவர் | | | |
| 8. | இளநிலை கணக்காளர் | | | |
| 9. | பண்டகக் காப்பாளர் | | | |
| 10. | ஏனையோர் | | | |
| **நிலை – 5** | | | | |
| 1. | ஓரளவு பயிற்சி பெற்ற பணியாளர் | 7,730.00 | 7,640.00 | 7,560.00 |
| 2. | முதுநிலை கொதிகலன் பணியாள் | | | |
| 3. | இலகு ரக வாகன ஓட்டுநர் | | | |
| 4. | தொலைபேசி இயக்குபவர் | | | |
| 5. | பதிவுரு காப்பாளர் | | | |
| 6. | ஏனையோர் | | | |
| **நிலை – 6** | | | | |
| 1. | பயிற்சி பெறாத பணியாளர் | 7,280.00 | 7,210.00 | 7,060.00 |
| 2. | கொதிகலன் பணியாள் | | | |
| 3. | அனுப்புகை பணியாள் | | | |
| 4. | துப்புரவுப் பணியாளர் / பெருக்குபவர் / உதவியாள் | | | |
| 5. | காவலாள் ஏனையோர் | | | |

**விளக்கங்கள்**

(1) **அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது திங்கள் ஒன்றுக்கு ரூ. 43.85 (நாற்பத்து மூன்று ரூபாய் எண்பத்து ஐந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான முந்தைய 12 மாதங்களுக்கான விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கெண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது.

(3) மாதாந்திர ஊதிய வீதங்களைக் கணக்கிட, குறைந்தளவு தின ஊதியத்தை (அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி) 26ஆல் வகுக்க வேண்டும்.

(4) இங்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள், அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி, (மொழிபெயர்ப்பு)த் துறை.*

அறிவிக்கை-I

*[அரசாணை (நிலை) எண் 202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (H1)த் துறை, 21 அக்டோபர் 2016.]*

**1970–**ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **37/1970**) **28–**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், **11–01–2006** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்***, பாகம் II, பிரிவு–2–ல் **17** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)LE/23/2006 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில், கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

## திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், **(1)** நெடும்பத்தியில் **1** முதல் **12** வரையிலான தொடர் எண்கள் மற்றும் **(2)** நெடும்பத்தியிலுள்ள அதன் நிகரான பதிவுகள் ஆகியவற்றுக்குப் பதிலாக முறையே கீழ்க்காணும் பதிவுகள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும் அவையாவன:–

<table>
<tr><th>நபர்கள்<br>(1)</th><th>உள்ளூர் அதிகார வரம்புகள்<br>(2)</th></tr>
<tr><td>"(1) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர்</td><td rowspan="14">தமிழ்நாடு மாநிலம் முழுவதும்</td></tr>
<tr><td>(2) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார முதுநிலை கூடுதல் இயக்குநர்</td></tr>
<tr><td>(3) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார முதுநிலை கூடுதல் இயக்குநர் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்)</td></tr>
<tr><td>(4) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர்கள்</td></tr>
<tr><td>(5) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள்</td></tr>
<tr><td>(6) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு)</td></tr>
<tr><td>(7) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு)</td></tr>
<tr><td>(8) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள் (பதிவு செய்தல்)</td></tr>
<tr><td>(9) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் (பயிற்சி மையம்)</td></tr>
<tr><td>(10) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு)</td></tr>
<tr><td>(11) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி.</td></tr>
<tr><td>(12) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள்–I, II, III (பயிற்சி மையம்)</td></tr>
<tr><td>(13) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு)</td></tr>
<tr><td>(14) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் (சோதனை மற்றும் பாதுகாப்பு)</td></tr>
<tr><td>(15) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி.</td><td rowspan="2">1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 8ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உள்ளூர் அதிகார வரம்புகள்.</td></tr>
<tr><td>(16) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள்</td></tr>
<tr><td>(17) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர்கள்</td><td rowspan="2">1996ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) (மத்தியச் சட்டம் 27/1996) சட்டத்தின்42ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உள்ளூர் அதிகார வரம்புகள்.</td></tr>
<tr><td>(18) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்)</td></tr>
</table>

| | |
|---|---|
| (19) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | |
| (20) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | |
| (21) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் (நடமாடும் குழு) | விருதுநகர் மாவட்டம்." |
| (22) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் (நடமாடும் குழு) | |

அறிவிக்கை-II

**1970–**ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **37/1970**) **6–**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், **11–01–2006** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்***, பாகம் II, பிரிவு**–2–**இல் **16** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/21/2006 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில், கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், "தொழிற்சாலைகளின் துணை தலைமை ஆய்வாளர்கள்", என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அறிவிக்கை-III

**1970–**ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **37/1970**) **11–**ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், **22–05–1991** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்***, பாகம் II, பிரிவு**–2–**இல் **351** ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/2685/1991 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில், கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையிலுள்ள அட்டவணையில் **(3)** தொடர் எண்ணில் **(1)** நெடும்பத்தியிலுள்ள தொடர் மற்றும் அது தொடர்பாக **(2)** நெடும்பத்தி மற்றும் **(3)** நெடும்பத்தி ஆகியவற்றிலுள்ள பதிவுகளுக்குப் பதிலாக, முறையே கீழ்க்காணும் தொடர்களும் பதிவுகளும் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:**–**

| | | |
|---|---|---|
| "**(3)** தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள் | **1948**ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **63/1948**) செயல்வரம்புகளின் கீழ் வருகிற அனைத்துத் தொழிற்சாலைகள் | **1948**ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **63/1948**) **8**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உள்ளூர் அதிகார வரம்புகள்." |

அறிவிக்கை-IV

**1970–**ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் **37/1970**) **15–**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், **11–01–2006**ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்***, பாகம் II, பிரிவு**–2–**இல் **18**ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/25/2006 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில், கீழ்க்காணும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், "தொழிற்சாலைகளின் இணை தலைமை ஆய்வாளர்கள்", என்ற சொற்றொடருக்குப் பதிலாக "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர்கள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை*

*[அரசாணை (நிலை) எண் 221, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 17 நவம்பர் 2016.]*

**1948**ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (a) பகுதியிலும் மேற்சொன்ன சட்டத்தின் **9**ஆம் பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், யாதொரு கம்பளி விரிப்பு தயாரிப்பு அல்லது சால்வை நெசவு நெய்யும் நிறுவனத்தில் வேலைவாய்ப்பிற்கான குறைந்த அளவு ஊதியங்களைத் திருத்தியமைத்தல் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கும் மாநில அரசுக்கு ஆலோசனை கூறுவதற்கும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை இதனால் அமைக்கிறார்.

**தனிப்பட்ட நபர்கள்:—**

| | |
|---|---|
| **1.** தொழிலாளர் நல துணை ஆணையர், திருநெல்வேலி, | தலைவர் |
| **2.** தொழிலாளர் நல ஆய்வாளர், சேலம். | செயலாளர் |
| **3.** உதவி இயக்குநர்,<br>பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, சென்னை—**600 006.** | உறுப்பினர் |

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள்:—**

| | |
|---|---|
| **1.** திரு. கே. கணேசன்,<br>அண்ணா தொழிற்சங்கப் பேரவை,<br>EL. **195**, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், காந்தி கிராமம்,<br>பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் — **639 004.** | உறுப்பினர் |
| **2.** திரு. கே. ஜீவானந்தம்,<br>இந்தியத் தொழிற்சங்க மையம்,<br>எண் **19**, ஓம் சக்தி நகர், புகளூர் சர்க்கரை ஆலை அஞ்சல்,<br>கரூர் — **639 113.** | உறுப்பினர் |
| **3.** திரு. ஜி. வெங்கடாசலம்,<br>அனைத்திந்திய தொழிற்சங்கப் பேரவை,<br>எண். **15**, கருப்பண்ணா தெரு, ஈரோடு — **638 001.** | உறுப்பினர் |

**வேலையளிப்பவரின் பிரதிநிதிகள்:—**

| | |
|---|---|
| **1.** திரு. ஜி. இரவிக்குமார்,<br>பொது மேலாளர்,<br>கோகோ டப்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிப்காட் வளாகம்,<br>மடத்தூர் அஞ்சல், தூத்துக்குடி — **628 008.** | உறுப்பினர் |
| **2.** திரு. ஏ. ரமேஷ் பாபு,<br>பொருளாளர்,<br>பவானி கைத்தறி விரிப்புகள் வணிகர் சங்கம்,<br>எண் **144**, பழனிபுரம் முதல் தெரு, பவானி — **638 301.** | உறுப்பினர் |
| **3.** திரு. எஸ்.பி. கிருஷ்ணன்,<br>உரிமையாளர்,<br>தி அஜாய் இண்டஸ்டிரியல்ஸ்,<br>எண் **21**, கல் தொழிலாளர் முதல் தெரு, பவானி, ஈரோடு. | உறுப்பினர் |

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை*

*அரசாணை (நிலை) எண் 222, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 17 நவம்பர் 2016.*

**1948**ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (a) பகுதியிலும் மேற்சொன்ன சட்டத்தின் **9**ஆம் பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், வீட்டு வேலை செய்யும் பணியாளர்களுக்கான குறைந்தளவு ஊதியங்களை நிர்ணயித்தல் சம்மந்தமாக விசாரணை நடத்துவதற்கும், மாநில அரசுக்கு ஆலோசனை கூறுவதற்கும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை இதனால் அமைக்கிறார்.

**தனிப்பட்ட நபர்கள்:—**

1. தொழிலாளர் நலத் துணை ஆணையர், கோயம்புத்தூர், — தலைவர்
2. தொழிலாளர் நல ஆய்வாளர், கோயம்புத்தூர், — செயலாளர்
3. உதவி இயக்குநர்,
   பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, சென்னை—600 006. — உறுப்பினர்

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள்:—**

1. திருமதி அ. பிரபா,
   அண்ணா தொழிற்சங்கப் பேரவை,
   எண் 48/8, 6 கனகசபை தெரு, 2வது குறுக்குத் தெரு,
   டாக்டர். கானு நகர், நெசப்பாக்கம், சென்னை — 600 078. — உறுப்பினர்
2. திருமதி. தி. அ. லதா,
   மாநில செயலாளர்,
   இந்தியத் தொழிற்சங்க மையம்,
   எண் 5/2, கண்ணகி தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை — 600 078. — உறுப்பினர்
3. திருமதி. வஹிதா நிஜாம்,
   மாநில செயலாளர்,
   அனைத்திந்திய தொழிற் சங்கப் பேரவை,
   எண் 55அ, ஏஐபிஇஏ (AIBEA) நகர், திருவான்மியூர்,
   சென்னை — 600 041. — உறுப்பினர்

**வேலையளிப்பவர்களின் பிரதிநிதிகள்:—**

1. திரு. டி. வெங்கடேஷ்,
   திருப்பூர் உணவக உரிமையாளர்கள் சங்கம்,
   1அ. மில்லர் காம்ப்ளக்ஸ், 50 அடி சாலை, லட்சுமி நகர்,
   பி.என். சாலை, திருப்பூர். — உறுப்பினர்
2. திரு. வி, பாலசுப்ரமணியம்,
   செயலாளர்,
   ஏஷியாட் காலனி அடுக்குமாடி உரிமையாளர்கள் நலச் சங்கம்,
   சென்னை — 600 101. — உறுப்பினர்
3. திரு. என். கந்தசாமி,
   செயலாளர்,
   வசந்தம் காலனி நலச் சங்கம்,
   எண் 1865, 4வது தெரு, வசந்தம் காலனி, அண்ணா நகர்
   சென்னை — 600 040. — உறுப்பினர்

**பி. அமுதா,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.